**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 48/2018**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | புகழேந்தி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 05.02.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தையம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 07.10.2017ம் தேதி நான் பழனி தாலுகா வட்ட காவல்ஆய்வாளராக பணியில் இருந்தபோது பழனி தாலுகா காவல்நிலைய சார்பு ஆய்வாளர் -திரு.செல்வராஜ் என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண். 361/2017, ச/பி. 8(c) r/w 20(b)(ii)(B) NDPS ACT வழக்கின் முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்குகோப்பைநான் பார்வையிட்டு 13.11.2017ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை தடய அறிவியல் ஆய்விற்காக அனுப்ப வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். 06.12.2017ம் தேதி இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வறிக்கை சான்று பெற்றேன். ஆய்வறிக்கையில் கெனபினாய்டுகள் இருப்பது கண்டறியப்பட்டு சான்று வழங்கிய துணை இயக்குநர், தடய அறிவியல் ஆய்வு துறையில் திரு.இராமச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் நீதிமன்றம் மூலம் தடய ஆய்வுத்துறைக்கு கஞ்சாவை கொண்டுசென்ற தலைமைக்காவலர்-448-மனோன்மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர்-செல்வராஜ் என்வரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் விசாரணையை முடித்து அன்றைய தினமே இந்த வழக்கின் எதிரி மீது ச/பி.8(c) r/w 20(b)(ii)(B) NDPS ACT ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மீதம் உள்ள P1 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சாவை பிரிவு 52(A)ன் படி தற்போது பொறுப்பில் உள்ள காவல் ஆய்வாளரால் திண்டுக்கல் நடுவர் நீதிமன்ற நடுவர் எண்-1 அவர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டு உரிய முறைப்படி அழிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. காவல் துறை ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.6** ஆகும். கைப்பற்றியகஞ்சாவை பகுப்பாய்வு செய்யக்கோரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.7** ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். மீதம் உள்ள P1 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சாவை பிரிவு 52(A)ன் படி தற்போது பொறுப்பில் உள்ள காவல் ஆய்வாளரால் திண்டுக்கல் நடுவர் நீதிமன்ற நடுவர் எண்-1 அவர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டு உரிய முறைப்படி அழிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது அந்த உத்தரவு **அ.சா.ஆ.9** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.